දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913


සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

මගේ අංකය ) DDG(EOHFS)/13-9/2017
எனது இல )
My No.

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය ) 09 .05.2020
திகதி )
Date )

සෞඛ්‍ය හා දේශීය වෛද්‍ය සේවා අමාත්‍යාංශය
சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு
**Ministry of Health & Indigenous Medical Services**

சுற்றறிக்கை இல.: 02-27/2020

அனைத்து மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பணிப்பாளர், தேசிய வைத்திய விஞ்ஞான நிறுவகம் மற்றும்
அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகட்கும்.

# வேலைத் தலங்களில் கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான முன்னாயத்தங்கள் மற்றும் பதில்நடவடிக்கைகளை மேற்கொள்வற்கான செயற்பாட்டு வழிகாட்டுதல்கள்

## பாபர் சலூன் (முடிவெட்டும் கடைகள்) மற்றும் அழகுபடுத்தற்சாலைகள்

கொவிட்-19 தொற்றுநோய் பரவும் சயமயத்தில் முடிவெட்டும் சேவைகளை வழங்குவதற்காக திறக்கப்படும் பாபர் சலூன்கள் (முடிவெட்டும் கடைகள்) மற்றும் அழகுபடுத்தற்சாலைகள் நடாத்திச் செல்லும்போது அனுசரிக்கவேண்டிய நடைமுறைகள் பற்றி இவ்வழிகாட்டி அறிவுறுத்தல் மூலம் விபரிக்கப்படுகின்றது.

இவ்வழிகாட்டி அறிவுறுத்தல்கள், 2020 ஏப்ரல் 17ந் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட "வேலைத் தலங்களில் கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான முன்னாயத்தங்கள் மற்றும் பதில்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாட்டு வழிகாட்டி அறிவுறுத்தல்கள்" (இதிலிருந்து பிரதான வழிகாட்டி அறிவுறுத்தல்கள் என அறியப்படும்) எனும் வழிகாட்டி அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக இது வெளியிடப்படுகின்றது. இது பிரதான வழிகாட்டி அறிவுறுத்தல்களாகும்.

http://eohfs.health.gov.lk/occupational/images/2020/Workplace_COVID guide-line_for_web_20200320.pdf எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

1. **பொதுவான செயற்பாடுகள்**

1.1 இவ்வழிகாட்டி அறிவுறுத்தல்களின் நோக்கமாவது, கொவிட்-19 பரவும் பாதுகாப்பற்ற சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கான முக்கிய சேவையெனக் கருதி பாபர் சலூன்கள் (முடிவெட்டும் கடைகள்) மற்றும் அழகுபடுத்தற் சாலைகள் என்வற்றினால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் பொருட்டு உதவுவதாகும்.

1.2 அழகுபடுத்தற்காலைகளினால் பின்காணப்படும் சேவைகள் மாத்திரம் வழங்கப்படல் வேண்டும்.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

1.2.1 முடிவெட்டுதல்/முடியை வெட்டிக் குறைத்தல்

1.2.2 முடிக்கு சாயமூட்டல்

1.2.3 கை, கால் நகங்களைப் பேணுதல்

1.2.4 கை, கால்களில் மாத்திரம் உரோமங்களை அகற்றுதல்.

1.3 இச்சேவை நிலையங்களில் சேவைநாடுனருக்கும் முடிவெட்டுபவருக்கு மிடையே நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் அடிப்படை நடைமுறையான பௌதீக இடைவெளியை பேணமுடியாதுள்ளது. எனவே, அவ்வாறு திறக்கப்படும் சேவை நிலையங்கள் கடைபிடிக்க வேண்டியதும் அனுசரிக்க வேண்டியதுமான வழிகாட்டுதல்கள் இங்கு விபரிக்கப்பட்டுள்ளன. அனைத்து பாபர் சலூன் (முடிவெட்டும்கடை)மற்றும் அழகுபடுத்தும்சாலைகள் இங்கு குறிப்பிடப்படும் வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்றல் வேண்டும்.

1.4 இவ்வழிகாட்டி அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனுமதிக்கப்படும் சேவை நிலையங்களில் வழங்கப்படும் சேவையானது மேலே பந்தி 1.2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பிறவேதும் சேவைகளை வழங்குதலாகாது. இவ்வாறான சேவைகளை வழங்கும்போது முடிவெட்டுபவருக்கும் சேவைநாடிக்குமிடையேயான சேவைநேரம் அதிகமாவதால் அதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றது.

1.5 சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பொலீசாரினால் இச்சேவை நிலையங்களில் வழங்கப்படும் சேவைகள் பற்றி மேற்பார்வை செய்யப்படுவதுடன் இவ்வழிகாட்டிகளில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை மீறும் சேவை நிலையங்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. பாபர் சலூனை (முடிவெட்டும் நிலையம்) அழகுபடுத்தற்சாலையை மீண்டும் திறப்பதற்காக அனுசரிக்கவேண்டிய நடைமுறைகள்

2.1 திறப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பாபர் சலூன் (முடிவெட்டும் நிலைய) அல்லது அழகுபடுத்தற்சாலை உரிமையாளர் / முகாமையாளர் அந்நிலையம் அமைந்திருக்கும் பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிக்கு விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.2 சுகாதார வைத்திய அதிகாரியினால் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைப்பு 01ல் குறிப்பிடப்பட்ட சீரிடல் பட்டியலொன்றும் உரிமையாளர்/முகாமையாளருக்கு வழங்கப்பட்டு இவ்வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை அனுசரிக்குமாறு கோரப்படுவார்.

2.3 உரிமையாளர் / முகாமையாளர் விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டுமென்பதுடன் இணைப்பு 01 உள்ள சீரிடல் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகள் நிலையத்திலுள்ள வசதிகளுடன் ஒப்பிடப்பட்டு சரியான தரவுகள் இரண்டாம் நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டு பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட பத்திரம் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

2.4 மாற்றுவழியாக, சுகாதார அமைச்சின் இணையத் தளத்திலிருந்து (health.gov.lk) பதிவிறக்கம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் பத்திரத்தையும் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்கலாம்.

2.5 இவ்விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதும் சுகாதார வைத்திய அதிகாரி அவர்கள் குறித்த பிரிவுக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரிடம் குறித்த வேலைத்தலத்தினைப் பரீட்சித்து அதனைப் சீரிடல் பட்டியலுடன் ஒப்பிட்டு அவரது சிபார்சினை வழங்குமாறு கோருவார்.

2.6 வேலைத்தலத்தின் முன்னாயத்த ஏற்பாடுகள் திருப்தியானவிடத்து சுகாதார வைத்திய அதிகாரியினால் அலுவலகத்திலுள்ள தற்காலிகப் பதிவேட்டில் அவ்வேலைத் தலம் பதிவு செய்யப்பட்டு சேவையினை ஆரம்பிப்பதற்குத் தேவையான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இவ்வத்தாட்சிப்பத்திர படிவம் இவ்வழிகாட்டி அறிவுறுத்தலின் இணைப்பு 02ல் வெளியிடப்பட்டுள்ளது.

2.7 உரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரியினால் சேவையை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திர மின்றி எத்தகு பாபர் சலூனும் (முடி வெட்டும் நிலையமும்) அல்லது அழகுபடுத்தற்சாலையும் சேவையை ஆரம்பித்தலாகாது.

3. **சேவை நிலைய ஏற்பாடுகள்**

3.1 பெரிய தாபனங்களிடம் மனித வள செயற்திட்டம் உட்பட எழுத்திலான கொவிட்- 19 முன்னாயத்தப் பணிகள் மற்றும் பதில் நடவடிக்கைகள் தொடர்பான செயற்திட்டமொன்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அச்செயற் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி மேற்பார்வை செய்து சான்றுபடுத்தும் பொருட்டு அதற்கென பொருத்தமான பிரத்தியேகப் பணியாளரொருவர் ஈடுபடுத்தப்படலும் வேண்டும்.

3.2 சேவைக்காக அழைக்கப்படுபவர் நிரந்தர அல்லது தனிப்பட்ட விபரங்களை வழங்கக்கூடிய பணியாளராயிருப்பதை உரிமையாளர் / முகாமையாளர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பணியாளர்களின் முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் நெருங்கிய உறவினர்களின் விபரங்கள் உள்ளிட்ட தகவல்களைக் கொண்ட பதிவேடொன்று உரிமையாளர்/ முகாமையாளரால் பேணப்படல் வேண்டுமென்பதுடன் அப்பதிவேட்டின் பிரதியொன்று பிரிவுக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்/சுகாதார வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

3.3 கீழ்குறிப்பிடப்படும் பிரிவினர் பணியாளர்கள் சேவைக்காக அழைக்கப்படலாகாது.

- காய்ச்சல், இருமல், மூக்கிலிருந்து சளித்திரவம் வடிதல், தொண்டைத் தொற்று மற்றும் மூச்செடுத்தல் கஷ்டமாதல் போன்ற தீவிர (குறுங்காலத்தினுள் ஏற்பட்ட) சுவாச நோய் இலட்சணங்களைக் கொண்ட நபர்கள்.

- கடந்த 14 நாட்களுக்குள் புதிய கொரோனா தொற்று தொடர்பாக சந்தேகிக்கும் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட நபருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட நபர்.

- புதிய கொரோனா தொற்றுள்ளதா என்பதை கணிக்கும் நோக்கில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்.

3.4 நோயுற்ற நபர் சேவைக்காக அறிக்கை செய்திருப்பின் அவரை உடனடியாக வீட்டிற்கு அனுப்ப வேண்டியது உரிமையாளர்/முகாமையாளரின் பொறுப்பாகும்.

3.5 சேவைக்குரிய வளவுக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு நபரும் (வருகையாளர்களும் பணியாளர்களும்) பிரவேசிப்பதற்கு முன் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல் வேண்டும். (இதன் பொருட்டு பாதத்தினால் இயக்கும் நீர் வடிமுனை பொருத்தமானதாகும்). மாற்றுவழியாக மதுசாரம் கொண்ட (மதுசாரம் 70% v/v) இருகர துப்புரவாக்கியை உபயோகிக்க இயலும். தொற்றுநீக்கி பாவித்தல் சிபார்சு செய்யப்படவில்லை. விரலடையாள இயந்திரம் இருக்குமிடத்து அதனைப் பாவித்த பின் இருகர துப்புரவாக்கியை (ஆகக் குறைந்தது மதுசாரம் 70% v/v கொண்ட) உபயோகித்தல் வேண்டும் என்பதுடன் விரலடையாள இயந்திரத்தின் ஒவ்வொரு பாவனைத் தவணையின் முன்னும் மற்றும் பின்னும் விரலடையாள இயந்திரத்திற்கு தொற்றுநீக்கி விசிறல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, நிலையத்தினுள் பிரவேசிக்குமிடத்தில் 0.1% சோடியம் ஹைபொக்ளோரைட் கொண்ட திராவகத்தின் ஊடாக நடந்து செல்வதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது பாதணிகளை கழற்றிவிட்டு நிலையத்தினுள் பாவிப்பதற்காக வேறுசோடி பாதணி வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

3.6 சேவை வழங்கும் வளவுக்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் அனைத்துப் பணியாளர்களினதும் தேக வெப்பநிலை பரீட்சிக்கப்படல் வேண்டும் என்பதுடன் வெப்பநிலை 98.4 °F அல்லது 37 °C யை விட அதிகரித்துள்ளமை பற்றி அறிக்கை செய்யப்படும் பட்சத்தில் அந்நபரை 10 அல்லது 15 நிமிடங்கள் ஓய்வெடுக்கச்செய்து மீண்டும் பரீட்சித்தல் வேண்டும். மீண்டும் வெப்பநிலை அதிகரித்த நிலையில் இருக்குமானால் அவர் திருப்பி அனுப்பப்படல் வேண்டும். இங்கு பாவிக்கப்படும் வெப்பமானி வைத்திய வெப்பமானியாயிருத்தல் வேண்டும்.

## 4. விஷேட செயற்பாட்டு நடைமுறைகள்

4.1 சேவைநாடுனருக்கு சேவை வழங்கும்போது முடிவெட்டுபவர் / அலங்காரம் செய்பவர் முகக் கவசமும் பாதுகாப்பு கண்ணாடி/கட்கவசமும் அணிந்திருத்தல் வேண்டும்.

4.2 பாவிக்கப்பட்ட முகக்கவசம் மற்றும் ரிஷு கடுதாசிகளை அகற்றுவதற்காக பாதத்தினால் திறக்கக்கூடிய குப்பைத் தொட்டிகள் வழங்கப்படல் வேண்டும்.

4.3 அலங்கார வேளை தவிர்ந்த ஏனைய நேரங்களில் அலங்காரம் செய்பவருக்கும் சேவைநாடுனருக்கமிடையில் ஆகக் குறைந்தது ஒரு மீட்டர் இடைவெளி பேணப்படல் வேண்டும். ஒரு மீட்டர் இடைவெளித் தூரத்தைப் பேணும் பொருட்டு பாபர் சலூனுக்குள் ஒரு தடவையில் அனுமதிக்கப்பெறும் சேவைநாடுனர்களின் தொகை கட்டுப்படுத்தப்படல் வேண்டும். சேவைநாடுனர்களுக்கு நேரத்தை ஒதுக்கி தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நடைமுறையொன்றைத் தாபித்துக் கொள்ள சிபார் செய்யப்படுகின்றது.

4.4 பௌதீக இடைவெளியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தளவாடங்களை மீளவும் ஒழுங்குசெய்து தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

4.5 சலூனுக்குள் பிரவேசிக்க காத்திருக்கும் நபர்களின் தொகையைக் கட்டுப்படுத்தவும். சேவைநாடுனர் தனது முறை வரும்வரை சலூனுக்கு வெளியே அல்லது தனது வாகனத்தினுள் தரித்திருப்பதற்கு சிபார்சு செய்யப்படுகின்றது.

4.6 சேவைநாடுனர் மற்றும் பணியாளர்கட்கிடையிலான பௌதீக கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்தவும்.

4.7 சஞ்சிகை, செய்திப்பத்திரிகை, சேவை விபரம், தொலைக்காட்சி சேய்மைக் கட்டுப்பாட்டுச் சாதனம், அனாவசிய கடுதாசியிலான உற்பத்திகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் போன்ற தேவையற்ற அனைத்தையும் அகற்றவும்.

4.8 ஒவ்வொரு முடிவெட்டுபவரும் / அலங்காரம் செய்பவரும் சேவைநாடுனருக்கு சேவையை வழங்குவதற்கு முன்னரும் பின்னரும் சவர்க்காரம் மற்றும் நீரிட்டு இரு கைகளையும் நன்றாகக் கழுவவும்.

4.9 முடிவெட்டுபவர் / அலங்காரம் செய்பவர் எச்சந்தர்ப்பத்திலும் சேவைநாடுனருக்கு பின்புறமாகவும் பக்கவாட்டிலும் மாத்திரம் நின்றுகொண்டு சேவையை வழங்க வேண்டுமென்பதுடன் எச்சந்தர்ப்பத்திலும் முகத்திற்கு முகம் நோக்கி (நேருக்கு நேராக) இருத்தலாகாது.

4.10 முடிவெட்டுபவர் / அலங்காரம் செய்பவர்களுக்கிடையே உபகரணங்களையும் மற்றும் கருவிகளையும் பரிமாறுவதையும் பகிர்ந்தளிப்பதையும் தவிர்க்கவும்.

4.11 சேவைநாடுனருக்கிடையேயுள்ள தொடர்பு காலத்தை குறைக்கும் பொருட்டு சேவையை ஆகக் குறைந்த காலத்தினுள் செய்து முடித்தல் வேண்டும்.

4.12 பாவிக்கப்பட்ட அனைத்து துணிகளும் (விரிப்பு மற்றும் துவாய்) என்பன ஒருமுறை பாவிக்கப்பட்ட பின்பு கழுவப்படல் வேண்டும் என்பதுடன் அவை கழுவப்படாது எச்சந்நதர்ப்பத்திலும் வேறு சேவைநாடுனருக்கு பாவிக்கக்கூடாது. சலூனில் ஆகக்குறைந்தது 2 நாட்களுக்குத் தேவையான துணிவகை இருத்தல் வேண்டும்.

4.13 மீசை மற்றும் தாடி வெட்டுதல் போன்ற சேவிங் (shaving) செய்தல் இடம்பெறலாகாது.

4.14 கழுத்து அதன் பின்பக்கம் போன்ற இடங்களில் பாவிக்ககப்பட்ட ரேசர் மற்றும் பிளேட் என்பவற்றை பாவனையின் பின் உடனடியாக பாதுகாப்பாக அகற்றுதல் வேண்டும் என்பதுடன் எச்சந்தர்ப்பத்திலும் அவை மீளப் பயன்படுத்தப்படலாகாது.

4.15 முடிவெட்டுபவர் எவ்வேளையிலும் சேவைநாடுனரின் உதட்டினைத் தொடலாகாது என்பதுடன் மூக்கினுள் உள்ள உரோமங்களை வெட்டுதலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

4.16 காற்றினை மீள்சுழற்சி செய்யும் காற்றுப் பதனி விதந்துரைக்கப்படமாட்டாது.

4.17 தொடுகைகளைக் குறைப்பதற்கேதுவாக முடிந்தவரை கதவுகளைத் திறந்து வைக்கவும். கதவினை மூடி வைப்பதாயின் மூடப்பட்ட கதவின் கைப்பிடியை/ தாழ்ப்பாழை (handles) ஒவ்வொரு மூன்று மணித்தியாலங்களுக்கொரு முறை தொற்றுத் தொற்று நீக்கம் செய்தல் வேண்டும். மாற்றுவழியாக, சேவைநாடுனருக்காக கதவினைத் திறப்பதற்கு பிறிதொரு பணியாளரொருவர் ஈடுபடுத்தப்படலாம்.

4.18 சலூனினுள்// அழகபடுத்தற்சாலையினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து சேவைகள் மற்றும் விஷேட செயற்பாடுகள் பற்றி சேவைநாடுனர் வாசித்து அறிந்து கொள்வதற்கேதுவாக சலூனினுள் தெளிவாக எழுத்துப் பிரதிகள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் சேவைநாடுனருக்கு அது பற்றி வாய்மொழி மூலமாகவும் அறிவுறுத்தல் வேண்டும்.

4.19 அனைத்து திறத்தவர்களும் மேற்காட்டிய செயற்பாடுகள் சரியாக அனுசரிக்கப்படுவதை கண்காணித்து மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

## 5. மேற்பரப்பினை சுத்திகரித்தலும் தொற்றுத் தடைக்காப்பு செய்த்தலும்

5.1 தினமும் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன், வழக்கமான சுத்திகரிப்புகளுக்கு மேலதிகமாக அனைத்து தளவாடங்கள், உபகரணங்கள், மற்றும் தளம் உட்பட வியாபார நிலையம் தொற்றுத் தடைக்காப்பு செய்யப்படுதல் வேண்டும். நாளுக்குரிய சேவை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்க முன்னர் வரவேற்பு பலகணி, வாடிக்கையாளர் காத்திருப்பு பிரிவிலுள்ள அனைத்து தளவாடங்களின் மேற்பரப்பினை தொற்று நீக்கம் செய்யவும். (3.3 உப பிரிவின் தொற்று நீக்கம் பிரிவின்பால் கவனத்தைச் செலுத்தவும்).

5.2 பிரதான வழிகாட்டி அறிவுறுத்தலின் 3.3 உப பிரிவின் பிரகாரம் ஒரு சேவைநாடுனர் பாவித்த சேவையின்போது அமரும் கதிரை, மேசையின் மேற்பரப்பு, சீப்பு மற்றும் முடிதிருத்தும் தூரிகை போன்றவை உள்ளிட்ட அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகளை மற்றொரு சேவைநாடுனருக்காகப் பாவிப்பதற்கு முன் அவற்றை தொற்றுத் தொற்று நீக்கம் செய்யவும்.

## 6. கழிவுகளை அகற்றுதல்

ஒவ்வொரு சேவைநாடுனருக்குமான சேவைகள் வழங்கப்பட்ட பின் வெட்டப்பட்ட முடிகளை பிறிதொரு கழிவகற்றும் பையினுள் சேகரித்தல் வேண்டும். அப் பை நிரம்பியதும் அதனை உரியவாறு கட்டி பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி ஒரு வாரத்தின் பின்பே அகற்றப்படல் வேண்டும். முகக்கவசம், ரிஷு கடுதாசி மற்றும் துடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கடுதாசி போன்ற ஒருதடவை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிரத்தியேக சுத்திகரிப்பு பொருட்களை பிறிதொரு கழிவகற்றும் பையினுள் இடவும். இப்பையும் மேற்குறித்தவாறு அகற்றப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக சுகாதார அமைச்சின் சுற்றாடல், துறைசார் சுகாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரிவினால் 2020 ஏப்ரல் 17ந் திகதி உபவழிகாட்டி அறிவுறுத்தல்களாக



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

வெளியிடப்பட்ட “வேலைத் தலங்களில் கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான முன்னாயத்தங்கள் மற்றும் பதில்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாட்டு வழிகாட்டுதல்கள்” சுற்றறிக்கையைப் பார்க்கவும்.

இச்சுற்றறிக்கை தொடர்பான உசாவுதலுக்காக சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுற்றாடல், துறைசார் சுகாதாரம் மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் லக்ஷ்மன் கம்லத் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் - 071 7723232, ltgamlath@gmail.com. அல்லது வைத்தியர் திலக் சிறிவர்த்தன, பணிப்பாளர் (சு.துசு.உபா.) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும் - 071 4499222, avissawella2003@gmail.com

விஷேட வைத்தியர் அனில் ஜயசிங்க
சுகாதார செவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

- கௌரவ பவித்ரா வன்னிஆரச்சி, சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் அவர்கள்.
- செயலாளர், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.
- மேலதிக செயலாளர் (ஆரம்ப சுகாதார சேவைகள்), சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.
- பிரதிப் பணிப்பாளர் நாயகம், ஆரம்ப சுகாதார சேவைகள் I
- பிரதிப் பணிப்பாளர் நாயகம், ஆரம்ப சுகாதார சேவைகள் II


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

இணைப்பு 01

**வேலைத் தலங்களில் கொவிட்-19 பரவுவதைத் தடுப்பதற்கான முன்னாயத்தங்கள் மற்றும் பதில்நடவடிக்கைகளை மேற்கொள்வற்கான செயற்பாட்டு வழிகாட்டி அறிவுறுத்தல்களின் கீழ் சலூன் / அழகுபடுத்தற்சாலை கடைகளைத் திறப்பதற்கான**
**விண்ணப்பப்பத்திரமும் சீரிடல் பட்டியலும்**

பாபர் சலூன்/முடிவெட்டும் கடையின் பெயர்:- ...........................................................................

வியாபாரப் பதிவு இலக்கம்:- ............................................................................................

முகவரி:- ...................................................................................................................

உரிமையாளர்/முகாமையாளரின் பெயர்:- ...........................................................................

தொலைபேசி (கையடக்க):- ................................ தொலைபேசி (நிரந்தர):- .........................

சேவை வழங்கும் முடிவெட்டுபவர்கள்/பாபர்களின்/தொழில்நுட்பவியலாளர் தொகை:- ..................

மொத்த பணியாளர்களின் தொகை:- .......................................................................................

| | பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைப்பாடுகள் | உர-ிமையாளரின் சீரிடல் | பொ.சு.ப.இன் அவதானிப்பு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | நீர்வசதி வழங்கப்பட்டுள்ளது | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 02 | சேவை நிலையத்தில் இடவசதியுள்ளதுடன் போதிய காற்றோட்டமுமுண்டு | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 03 | கைகழுவும் வசதி/இருகர துப்பரவாக்கி உட்பிரவேச இடத்திலும் கடையினுள்ளும் வழங்கப்பட்டுள்ளது | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 04 | பணியாளர் பெயர் மற்றும் விபரப்பட்டியல் உண்டு | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 05 | துணிவகைகளின் தொகை ஆகக்குறைந்தது 2 நாட்களுக்கான சேவைக்கு போதுமானது | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 06 | முகக்கவசம், ரிஷு கடுதாசி என்பவற்றை அகற்றுவதற்காக பாதத்தினால் திறக்கவல்ல குப்தைத்தொட்டி உண்டு | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 07 | உபகரணங்களை பாபர்களிடையே கைமாற்றுதலை தவிர்க்கும் பொருட்டு அவர்களுக்கு போதிய அளவு வழங்கப்பட்டுள்ளது | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 08 | கழிவுகளை அகற்றுவதற்காகவுள்ள பைகளின்தொகை போதுமானதாகும் | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 09 | சேவை வழங்கும் கதிரைகட்கிடையே 1 மீட்டர் இடைவெளியுள்ளவாறு தளவாடங்கள் இடப்பட்டுள்ளன | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | வாடிக்கையாளர்கட்கிடையே 1 மீட்டர் இடைவெளியுள்ளவாறு உள்ளக தளவாடங்கள் இடப்பட்டுள்ளன | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 11 | தொற்றுத் தடைக்காப்பு திராவகம் உண்டு | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |
| 12 | பாபர் சலூனினுள்ளும் வெளியேயும் சேவைநாடுனர்களுக்கான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன | ஆம்/இல்லை | ஆம்/இல்லை | |

மேற்குறித்த விபரங்கள் உண்மையானவையென நான் அத்தாட்சிப்டுத்துவதுடன் மேற்காட்டிய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய நான் தவறுமிடத்து சுகாதார வைத்திய அதிகாரியினால் எனது பாபர் சலூனை/முடிவெட்டும் கடையை மூடிவிட முடியும் என்பதை நான் அறிவேன். அவ்வாறே இங்கு மேலே பந்தி 2.1 இல் குறிப்பிட்ட சேவை மாத்திரமே இடம்பெறும் எனவும் வேறு சேவைகள் வழங்கப்படமாட்டாதெனவும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

................................................................ ..........................................................

உரிமையாளர்/முகாமையாளரின் பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம்

பாபர் சலூனை/முடிவெட்டும் கடையை/அழகுபடத்தற்சாலையை திறப்பதற்கு சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

................................................................

பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

மேல் நடவடிக்காக

………………………………………………….

மேற்பார்வை பொ- சு- ப-

பாபர் சலூனை/முடிவெட்டும் கடையை/அழகுபடத்தற்சாலையை திறப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

...............................................

சுகாதார வைத்திய அதிகாரி

இணைப்பு 02

# பாபர் சலூனை/ அழகுபடுத்தற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான அத்தாட்சிப்பத்திரம்

பாபர் சலூன்/ அழகுபடுத்தற்சாலை கடையின் பெயர்:- ...........................................................

முகவரி:- ............................................................................................................................

உரிமையாளர்/முகாமையாளரின் பெயர்:- ......................................................................

மேற்குறித்த பாபர் சலூன்/ அழகுபடுத்தற்சாலை சம்பந்தமாக ................................ ந் திகதி சமர்ப்பித்த தங்கள் விண்ணப்பப்பத்திரத்தினை பரிசீலனை செய்த பின் ................................ ந்திகதியிலிருந்து சேவையை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் சேவைகள் மாத்திரமே வழங்க முடியும் என்பதுடன் வேறு சேவைகள் எதுவும் வழங்க முடியாது.

- முடிவெட்டுதல்/முடியை வெட்டிக் குறைத்தல்
- முடிக்கு சாயமூட்டல்
- கை, கால் நகங்களைப் பேணுதல்
- கை, கால்களில் மாத்திரம் உரோமங்களை அகற்றுதல்.

இருப்பினும், வழிகாட்டி அறிவுறுதல்தல்களில் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ய நீங்கள் தவறுமிடத்து எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி இவ்வத்தாட்சிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

.................................................. .....................................
சுகாதார வைத்திய அதிகாரி திகதி
ஒப்பமும் அலுவலக முத்திரையும்


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.